மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருப்பூரைப் பற்றி பின் பாயின்ட் பண்ணியாகிவிட்டது. அதற்குமேலே பொதுப்படையாக கேள்விகள் கேட்டால், மற்றக் கேள்விகளுக்கு சும்மா இருக்கவேண்டியதுதான். தொழிலாளர் பிரச்சினையிலே அக்கறை இருப்பது முக்கியம்தான். இருக்கிற ஒரு பிரச்னைக்கே பொதுப் படையாகப் போனால், முடிவே வராது. இன்னும் 13 கேள்விகள் பாக்கியிருக்கின்றன. 10 மணிக்கு மேல் மீதியிருக்கின்ற கேள்விகளுக்கு விடையை அச்சடித்துத் தரலாம் என்பதை ஒத்துக் கொண்டால், சரிதான். அந்தப் பிரச்னைக்கு வாருங்கள். அப்போது நான் எல்லாக் கேள்விகளையும் அனுமதிக்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவ அவர்களே, கூட்டுறவு அங்காடிகளைப் பொறுத்த வரையில், They are separate autonomous bodies. Government has got nothing to do with them. Government will not be in a position to fix their pay.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வியையொட்டிய துணைக் கேள்விகளுக்கு மட்டும் அமைச்சர்கள் சுருக்கமாக பதில் சொல்ல வேண்டும். நான் தப்பாகச் சொல்லவில்லை— உறுப்பினர்கள் எல்லாவற்றையும் பற்றிக் கேட்பார்கள், எல்லாவற்றுக்கும் அமைச்சர்கள் பதில் சொல்வது என்று வந்தால் அப்போது நான் சபையை நடத்துவது கஷ்டம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: திருப்பூர் மணிமாறன் விரிவாகக் கேட்டார். எனவே, அந்தப் பதில் அளித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எல்லா அமைச்சர்களுக்கும் பொதுவாகச் சொன்னேன். கூட்டுறவு அமைச்சருக்கு மட்டுமல்ல.

ஆத்தூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம்

*வினா எண். 70 — திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆத்தூரில் முன்சீப் கோர்ட் 1980-ல் நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், நிறுவப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) எந்தெந்த அடிப்படையில் புதிய முன்சீப் கோர்ட்டுகள் நிறுவப்படுகின்றன?

1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மற்றும்

(ஆ) ஆத்தூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணை உள்துறையின் 6.9.1980 ஆம் நாளிட்ட 2306 எண்ணுள்ள அரசு ஆணையில் வழங்கப்பட்டுள்ளது.

(இ) 1973 ஆம் ஆண்டு நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குழுவின் பரிவுரைக்கேற்ப புதிய மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் நிறுவப்படுகின்றன.

திரு. சி. பழனிமுத்து: 6–11–80ல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் நிறுவப்பட்டு நடைபெறுகிறது. அந்த நீதிமன்றத்தில் எல்லா அதிகாரிகளும் பணியாளர்களும் நியமிக்கப்பட்டு விட்டார்களா? மாவட்ட முன்சீப் நீதிமன்ற நீதிபதிக்கு குடியிருப்பு கட்டித் தரப் படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நீதிபதி அவர்களுக்கு குடியிருப்பு கட்டித் தரக்கூடிய செயற்குறிப்பு இல்லை. பணியாளர்கள் அமர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது.

முன்னோடி வங்கித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன்கள்

*வினா எண். 71—திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் Lead Bank—திட்டத்தின் மூலம் விவசாயம், சிறுதொழில் ஆகியவற்றிற்கு இதுவரை எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) குறைவாக இருப்பின் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் முன்னோடி வங்கி(Lead Bank) திட்டத்தின் மூலம் விவசாயம், சிறுதொழில் ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு வணிக வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் கடன் ஒதுக்கீடுக்கு அதிகமாகவே கடன் வழங்கியுள்ளன.

	விவசாயம்			தொழில்		
	ஒதுக் கீடு	சாதனை	விழுக் காடு	ஒதுக்கீடு	சாதனை	விழுக் காடு
1. வணிக வங்கிகள்	1152.11	1499.73	130%	718.32	1598.22	202%
2. கூட்டுறவு வங்கிகள்	698.75	872.75	125%	837.50	1064.09	127%

(ஆ) வினாவிற்கு இடமில்லை.